# <u>பொன்னேரி நகராட்சி</u>
# <u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23.12.2022 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

**<u>பொருள் எண் 1</u>**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் நவம்பர் 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மாண எண்:148 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: பதிவு செய்யப்படுகிறது .**

**<u>பொருள் எண் 2</u>**

பொன்னேரி நகராட்சி அலுவலகத்தில் திட்டப்பணிகள், அலுவலக பணி தொடர்பாக கோப்புகளை ஜெராக்ஸ் எடுக்க நகராட்சி அலுவலகத்தில் ஜெராக்ஸ் மெஷின் இல்லாததால் வெளி இடங்களில் ஜெராக்ஸ் எடுக்கும் நிலை ஏற்பட்டு கூடுதல் செலவினம் ஏற்படுகிறது. எனவே நகராட்சி அலுவலகத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்று பொதுநிதியில் வாங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ 1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**( ந.க.எண் 1185/2022 / அ1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 149 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண் 3</u>**

பொன்னேரி நகராட்சியில் டெங்கு ஒழிப்பு பணிக்காக 2 எண்ணிக்கை Fogging Machine பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 2 எண்ணிக்கை Fogging Machine களை மட்டும் வைத்து நகராட்சி பகுதி முழுவதிலும் புகை மருந்து அடிப்பதில் சிரமம் ஏற்படுவதால் நகராட்சி பகுதி முழுவதிலும் புகை மருந்து அடிக்கவும், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கூடுதலாக 5 எண்ணிக்கை Fogging Machine பொது நிதியில் வாங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ 5.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 1186/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 150 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண் 4</u>**

பொன்னேரி நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு பணிகளுக்காக வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் கழிவுகளை மக்கும், மககாத கழிவுகளை மற்றும் அபாயகரமான கழிவுகளை தனித்தனியாக பிரித்து செயலாக்க மையங்களுக்கு பிரித்து சேகரித்து எடுத்துச் செல்ல போரா பைகள் தேவைப்படுவதால் 2000 எண்ணிக்கை போரா பைகள் வாங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ 30000 /- க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 341/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 151 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது**

**<u>பொருள் எண் 5</u>**

பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் சமுதாய மற்றும் பொதுகழிப்பறைகளை பயன்படுத்தும் பொதுமக்களின் கருத்துகளை QR Code வழியாக இணைய முகப்பில் (Portal) தெரிவிக்க வசதியாக QR Code பலகை மற்றும் Feedback Label தயார் செய்து அனைத்து சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்களில் பொருத்தி நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க. எண் 31420/2022 நாள் 17.11.2022 ல் அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சி பகுதிகளில் இயங்கி வரும் சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களில் QR Code மற்றும் Feedback Label தயார் செய்து பொருத்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ 16000/- க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 341 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 152 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 6**

பொன்னேரி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெயியில் மலம் கழித்தல் இல்லா நகரம், குப்பை இல்லா நகரம் நட்சத்திர அங்கிகாரம் பெறுவது ஆகியவை தொடர்பாக மாலை மலர் நாளிதழில் விளம்பரம் செய்வதற்கு கீழ்காணும் விவரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| பட்டியல் நாள் 1.7.2022 | = | ரூ 2835/- |
| பட்டியல் நாள் 24.11.2022 | = | ரூ 4200/- |
| பட்டியல் நாள் 1.12.2022 | = | ரூ 5000/- |
| மொத்தம் | | 12035 |

மேற்படி தொகையினை மாலைமலர் நிறுவனத்திற்கு வழங்கிடவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 411 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 153 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**பொருள் எண் 7**

பொன்னேரி நகராட்சி 20 வது வார்டு பகுதிக்குட்பட்ட கட்டபொம்மன் தெரு, வ.ஊ.சி தெரு ஆகிய இடங்களில் தெரு விளக்கு மின் கம்பங்களில் மின் இணைப்பு இல்லாததால் விளக்குகள் தொடர்ந்து எரிந்து வண்ணமே உள்ளதால் அப்பகுதிக்கு தெரு மின் விளக்கு மின் இணைப்பு பெற்றுத் தரக் கோரி 20 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை மனு அளித்ததை தொடர்ந்து, நகர்மன்ற தலைவரின் அறிவுரைப்படி அனைத்து வார்டுகளிலும் தெரு மின் விளக்கு இல்லாத பகுதிகளில் மின் இணைப்பு பெற்றிட மின் வாரியத்திற்கு கடிதம் அனுப்பிடவும் அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண் 262/2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 154 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண் 8</u>**

பொன்னேரி நகராட்சி 2வது வார்டு பகுதிக்குட்பட்ட பஜனை கோயில் தெருவில் கழிவுநீர் கால்வாய் வசதி இல்லலாததால் கழிவுநீர் கசிவு ஏற்பட்டு பொதுசுகாதார சீர்கேடு அபாயம் உள்ளதாகவும் 2வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை மனு அளித்ததை தொடர்ந்து நகர்மன்ற தலைவரின் அறிவுரைப்படி அப்பகுதியில் கழிவுநீர் வெளியேற பைப்லைன்அமைக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ 30000/- க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 1121 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 155 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண் 9</u>**

பொன்னேரி நகராட்சி 13,14வது வார்டுகளுக்குட்பட்ட கிருஷ்ணசாமி தெரு, தண்டபானி நாடார் தெரு, நீலிஅப்பாதுரைதெரு ஆகிய தெருக்களில் வேகதடை அமைத்து தரக்கோரி 13வது வார்டு நகர்மன்ற உறுப்பினர், 14வது நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர் கோரிக்கை மனு அளித்ததை தொடர்ந்து நகர்மன்ற தலைவரின் அறிவுரைபடி மேற்படி பகுதிகளில் வேகத்தடை அமைத்திடவும் மேலும் மருத்துவமனை, பள்ளிகள் அமைந்துள்ள பகுதிகளில் வேகத்தடை அமைத்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ3.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண் 1121 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 156 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண் 10</u>**

இந்நகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் பொது நிதியில் 14 கடைகளும் APAMT திட்டத்தின் கீழ் 17 கடைகளும், IDSMT திட்டத்தின் கீழ் 14 கடைகளும் ஆக மொத்தம் 45 கடைகள் வணிக நோக்கத்திற்காக கட்டப்பட்டு பேரூராட்சி காலத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவாறே புதிய பேருந்து நிலையத்தில் பொது நிதியில் 19 கடைகளும், IDSMTதிட்டத்தின் கீழ் 8 கடைகளும் ஆக மொத்தம் 27 கடைகள் கட்டப்பட்டு பேரூராட்சி காலத்தில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

மேற்படி 72 கடைகளுக்கும் நகராட்சி குத்தகை விதிகளை பின்பற்றி தற்போதைய சந்தை நிலவரப்படி பொதுப்பணி துறை வழிகாட்டு முறைகளை பின்பற்றி வாடகை கணக்கீடு செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக வாடகை நிர்ணயக் குழு ஒப்புதல் பெற்று புதிய வாடகை நிர்ணயம் செய்து வசூலிக்க நகரமன்ற தீர்மானம் எண் 27 நாள் : 02.05.2022ன் வாயிலாக நகர மன்ற ஒப்புதல் பெறப்பட்டு வாடகை கணக்கீடு செய்து வழங்க இந்நகராட்சி பொறியாளரை(பொ) கேட்டுக் கொள்ளப்பட்டு வாடகை நிர்ணய அறிக்கை 02.09.2022ல் பெறப்பட்டுள்ளது.

மேலும், இந்நகராட்சி பழைய பேருந்து நிலையம், அரிஅரன் பஜார் பகுதி மற்றும் புதிய பேருந்து நிலையம் அமைந்த தேரடி பகுதியில் உள்ள கடைகளுக்கு சந்தை மதிப்பில் உள்ள வாடகை குறித்தும் வருவாய் ஆய்வர்(பொ) மற்றும் வருவாய் உதவியாளர்கள் நேரில் விசாரணை செய்தும் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட 72 கடைகளில் பழைய பேருந்து நிலைய APAMT திட்ட நிதி கடைகளின் பின்புறம் பாதாள சாக்கடை திட்டத்திற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டதால் கடை எண் 1 முதல் 13 வரையிலான கடைகள் ஏலம் போகாமல் காலியாக உள்ளன. IDSMT திட்ட நிதி கடைகள் – 3 மற்றும் புதிய பேருந்து நிலைய ஒரு கடை சேர்த்து மொத்தம் 17 கடைகள் தற்போது காலியாக இருந்து வருகின்றன. அவற்றுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 28.06.2022ல் கோரப்பட்டு மேற்படி கடைகளை குத்தகைக்கு எடுக்க எவரும் முன் வராமல் மேற்படி 17 கடைகளும் காலியாகவே இருந்து வருகின்றன

APAMT திட்ட 13 கடைகள் ஏலம் போக வாய்ப்பு இல்லாததால் அவற்றினை குத்தகை இன கேட்பிலிருந்து நீக்கம் செய்து குத்தகைதாரர்கள் உள்ள 55 கடைகள் காலியாக உள்ள 4 கடைகள் ஆகமொத்தம் 59 கடைகளுக்கு 01.04.2022ல் 5 சதவீதம் உயர்வு செய்து தற்போது வசூலிக்கப்பட்டுவரும் வாடகை , பொது பணி துறை வழிகாட்டு முறைகளை பின்பற்றி கணக்கீடு செய்யப்பட்ட வாடகை , மற்றும் நேரில் விசாரித்து அறியப்பட்ட சந்தை மதிப்பிலான வாடகை விவரம் பின்வருமாறு

## பழைய பேருந்து நிலைய பொது நிதி கடைகள் ஹரிஅரன் பஜார்

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | தற்போதைய மாத வாடகை | கணக்கீடு செய்யப்பட்ட வாடகை | சந்தை மதிப்பு வாடகை |
|---|---|---|---|---|---|
| 1 | யாகூப் | 1 | 1666 | 1953 | 5000 |
| 2 | எம்.சுப்ரமணி | 2 | 1666 | 1953 | 5000 |
| 3 | மதனகோபால் | 3 | 1666 | 1953 | 5000 |
| 4 | சோமசுந்தரம் | 4 | 1666 | 1953 | 5000 |
| 5 | சேர்மகனி | 5 | 1666 | 1953 | 5000 |
| 6 | சிட்டிபாபு | 6 | 1666 | 1953 | 5000 |
| 7 | ராமச்சந்திரன் | 7 | 1666 | 1953 | 5000 |
| 8 | அ.கோபிநாதன் | 8 | 1666 | 1953 | 5000 |
| 9 | கோதண்டராமன் | 9 | 1666 | 1953 | 5000 |
| 10 | பட்டம்மாள் | 10 | 1666 | 1953 | 5000 |
| 11 | ஆர்.சுந்தர் | 11 | 1666 | 1953 | 5000 |
| 12 | ஆர்.பி.எஸ்.பழனி | 12 | 1666 | 1953 | 5000 |
| 13 | எம்.அசோகன் | 12 A | 839 | 1953 | 5000 |
| 14 | துரைராஜ் | 1 A | 990 | 1953 | 5000 |

பழைய பேருந்து நிலைய **APAMT** திட்ட நிதி கடைகள் ஹரிஅரன் பஜார்

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | தற்போதைய மாத வாடகை | பொ.ப,துறை வழிகாட்டு முறை வாடகை கணக்கீடு | சந்தை மதிப்பிலான வாடகை |
|---|---|---|---|---|---|
| 15 | காலியாக உள்ளது | 1 | 1850 | 1429 | 5000 |
| 16 | காலியாக உள்ளது | 2 | 1850 | 1429 | 5000 |
| 17 | காலியாக உள்ளது | 3 | 1773 | 1429 | 5000 |
| 18 | காலியாக உள்ளது | 4 | 1850 | 1429 | 5000 |
| 19 | ஏலம்போகாமல் காலியாக உள்ளது | 5 | 1850 | 1429 | 5000 |
| 20 | காலியாக உள்ளது | 6 | 1850 | 1429 | 5000 |
| 21 | காலியாக உள்ளது | 7 | 1773 | 1429 | 5000 |
| 22 | ஏலம்போகாமல் காலியாக உள்ளது | 8 | 1773 | 1496 | 5000 |
| 23 | | 9 | 1773 | 1496 | 5000 |
| 24 | | 10 | 1773 | 1496 | 5000 |
| 25 | | 11 | 1626 | 1496 | 5000 |
| 26 | | 12 | 1626 | 1496 | 5000 |
| 27 | காலியாக உள்ளது | 13 | 1626 | 1496 | 5000 |
| 28 | பி.எஸ். வாசுதேவன் | 14 | 2015 | 1496 | 5000 |
| 29 | S. சலீம் | 15 | 2015 | 1496 | 5000 |
| 30 | சௌகத் அலி | 16 | 2015 | 1496 | 5000 |
| 31 | உமா சங்கர் | 17 | 2106 | 1496 | 5000 |

பழைய பேருந்து நிலைய **IDSMT** திட்ட நிதி கடைகள் ஹரிஅரன் பஜார்

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | தற்போதைய மாத வாடகை | பொ.பதுறை வழிகாட்டு முறை வாடகை கணக்கீடு | சந்தை மதிப்பிலான வாடகை |
|---|---|---|---|---|---|
| 32 | ஆரூன் | 1 | 1397 | 1568 | 5000 |
| 33 | காளியப்பன் | 2 | 1397 | 1568 | 5000 |
| 34 | மொய்தீன் | 3 | 1397 | 1568 | 5000 |
| 35 | பிள்ளையார் | 4 | 1397 | 1568 | 5000 |
| 36 | முரளி | 5 | 1397 | 1568 | 5000 |
| 37 | ஆர்.குமார் | 6 | 1397 | 1568 | 5000 |
| 38 | நாகராஜ் | 7 | 1397 | 1568 | 5000 |
| 39 | பத்மாவதி | 8 | 839 | 1568 | 5000 |
| 40 | நாகராஜ்/சம்பத் | 9 | 839 | 1568 | 5000 |
| 41 | கார்த்திக் | 10 | 1137 | 1568 | 5000 |
| 42 | உமா சங்கர் | 11 | 1155 | 1568 | 5000 |
| 43 | காலியாக உள்ளது | 12 | 839 | 1568 | 5000 |
| 44 | காலியாக உள்ளது | 13 | 839 | 1568 | 5000 |
| 45 | காலியாக உள்ளது | 14 | 839 | 1568 | 5000 |

புதிய பேருந்து நிலைய பொது நிதி கடைகள் தேரடி தெரு

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | தற்போதைய மாத வாடகை | பொ.பதுறை வழிகாட்டு முறை வாடகை கணக்கீடு | சந்தை மதிப்பிலான வாடகை |
|---|---|---|---|---|---|
| 46 | எஸ். அக்பர் அலி | 1 | 2525 | 3100 | 5000 |
| 47 | கே.முஜிபுர் ரகுமான் | 2 | 2525 | 3100 | 5000 |
| 48 | கே.சீனிவாசன் | 3 | 2525 | 3100 | 5000 |
| 49 | எஸ்.ஆறுமுகம் | 4 | 2525 | 3100 | 5000 |
| 50 | பி.கங்காதரன் | 5 | 2525 | 3100 | 5000 |
| 51 | ம.கந்தன் | 6 | 2140 | 3100 | 5000 |
| 52 | ஆர்.பாண்டியன் | 7 | 2140 | 3100 | 5000 |
| 53 | ஜி.கே.ராஜன் | 8 | 2445 | 3100 | 5000 |
| 54 | ஆர்.ரவி | 9 | 2423 | 3100 | 5000 |
| 55 | ஏ.அபுதாகிர் | 10 | 2423 | 3100 | 5000 |
| 56 | கே.மணிவண்ணன் | 11 | 2423 | 3100 | 5000 |
| 57 | ம.சுந்தரமூர்த்தி | 12 | 2324 | 3100 | 5000 |
| 58 | து.ஜெயபாலன் | 13 | 2211 | 3100 | 5000 |
| 59 | நசிருதீன் | 14 | 2211 | 3100 | 5000 |
| 60 | கே.பாலாஜி | 15 | 2211 | 3100 | 5000 |
| 61 | கே.பாலாஜி | 16 | 2211 | 3100 | 5000 |
| 62 | எம்.சந்திரன் | 17 | 2160 | 3100 | 5000 |
| 63 | பி.சங்கர் | 18 | 2054 | 3100 | 5000 |
| 64 | காலியாக உள்ளது | 19 | 2054 | 3100 | 5000 |

புதிய பேருந்து நிலைய IDSMT திட்ட நிதி கடைகள்

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | தற்போதைய மாத வாடகை | பொ.ப.துறை வழிகாட்டு முறை வாடகை கணக்கீடு | சந்தை மதிப்பிலான வாடகை |
|---|---|---|---|---|---|
| 65 | லட்சுமி நாராயணன் | 1 | 3494 | 3037 | 5000 |
| 66 | D. முருகன் | 2 | 4180 | 3178 | 5000 |
| 67 | பி. சரோஜா | 3 | 4041 | 3037 | 5000 |
| 68 | பாஸ்கர் | 4 | 8775 | 6130 | 5000 |
| 69 | R. யுவராஜ் | 5 | 3754 | 3226 | 5000 |
| 70 | H. கஜேந்திரன் | 6 | 3754 | 3226 | 5000 |
| 71 | பாலமுருகன் | 7 | 2931 | 3037 | 5000 |
| 72 | வினோத்குமார் | 8 | 3024 | 3037 | 5000 |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
**( ந.க.எண் 312 /2022 / அ1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 157 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: ஒப்புதல் வழங்கப்படுகிறது.**

**<u>பொருள் எண் 11</u>**

பொன்னேரி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெறவும், குப்பைகள் தேங்காமல் தினந்தோறும் அப்புறப்படுத்தவும் இந்நகராட்சிக்கு தூய்மைப் பணியாளர்களை வழங்கி வரும் பணியை கிரீன் சர்வீசஸ் ட்ரஸ்ட் நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அதற்கான ஒப்பந்த நீட்டிப்பு பணிக்காலம் **31.12.2022**ல் முடிவடைகிறது. எனவே ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களை வழங்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிட உரிய நிர்வாக அனுமதி பெற்றிட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஆணைகள் வரும்வரை மேற்படி பணியினை தடையின்றி செய்திட கிரீன் சர்வீசஸ் ட்ரஸ்ட் நிறுவனத்தின் ஒப்பந்தத்தினை **28.02.2023** வரை நீட்டிப்பு செய்திடவும் ஒப்பந்த துய்மை பணியாளர்களின் கோரிக்கைகளை ஏற்று ஒப்பந்த உதியம் ரூ. **8500/-** லிருந்து ரூ. **500/-** உயர்த்தி ரூ. 9000/- மாத ஊதியமாக வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொது சுகாதாரம் நலன்கருதி பணி நீட்டிப்பு செய்ய அனுமதிக்கலாம்
2. செலவினத்தினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**( ந.க.எண் 102/2019 /அ1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 158 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: அனுமதி வழங்கப்படுகிறது.**

## பொருள் எண் 12

பொன்னேரி நகராட்சியில் இரவு காவலர், கணினி இயக்குபவர், பொது கழிப்பிட காவலர், குடிநீர் விணியோக பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அன்னை அஞ்சுகம் மகளீர் சுய உதவிக்குழு மூலமாக பணி புரிந்து வருகின்றனர். அன்னை அஞ்சுகம் மகளீர் சுயஉதவி குழுவிற்கு ஒப்பந்தம் டிசம்பர் 2022 உடன் முடிவடைவதால் மேற்படி குழுவின் ஒப்பந்த காலத்தினை பிப்ரவரி 2023 வரை நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலக்குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம் (ந.க.எண் 678 /2021 / அ1

நகர்மன்ற தீர்மாண எண்: 159 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: அனுமதி அளிக்கப்படுகிறது.**

## பொருள் எண் 13

பொன்னேரி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 2022-2023 ன் கீழ் பஞ்செட்டி சாலை சர்வேஎண் 337/5ல் உள்ள குப்பை கிடங்கில் உள்ள 26435 கன அடி குப்பைகளை உயிரியல் செயலாக்க முறையில் அகற்றும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 19009/2022 SBM-1நாள் 25.11.2022 மூலம் ரூ.186.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக்குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண் 681 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 160 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: பதிவு செய்யப்படுகிறது.**

## பொருள் எண் 14

பொன்னேரி நகராட்சியில் ஒலிப்பெருக்கி மூலம் வரியினங்கள் தொடர்பான அறிவிப்புகள் மற்றும் இதர அறிவிப்புகள் செய்ய ஒலிப்பெருக்கி ஒன்று தேவைப்படுவதால் அதனை பொது நிதியில் வாங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 30000 /- க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**அலுவலக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண் 1131 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 161 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: அனுமதி வழங்கப்படுகிறது.**

## **பொருள் எண் 15**

பொன்னேரி நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடைபெற்று வருவதால் ஆங்காங்கே குடிநீர் பைப்லைன் பழுது ஏற்பட்டு பராமரிப்பு பணிகள் பாதிக்கப்படுகிறது. மேலும் நகராட்சியில் உள்ள குடிநீர்பணியாளர்களை கொண்டு அனைத்து பராமரிப்பு பணிகளையும் உடனடியாக செய்ய இயலாமல் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே ஒப்பந்த அடிப்படையில் நான்கு பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**அலுவலக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண் 1072 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 162 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: அனுமதி வழுங்கப்படுகிறது .**

## **பொருள் எண் 16**

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள மினிலாரி, மினி காம்பாக்டர், டிராக்டர் வாகனங்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் பொதுசுகாதாரப்பணிகள் பாதிக்கப்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளது. ஏனவே மேற்படி வாகனங்களை அவசர அவசியம் கருதி பழுதுபார்க்கும் பணியை உடனுக்குடன் மேற்கொள்ளவும், பழுதாகும் உதிரிபாகங்களை மாற்றியமைக்கவும் மற்றும் , மேற்படி வாகனங்களை பழுதுபார்த்து FC செய்திடும் பணியை விலைப்புள்ளி அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்கான தோராய செலவினம் ரூ. 7,00,000 /-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண் 28 /2022 / அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 163 நாள்: 23.12.2022

**தீர்மானம்:: அனுமதி வழுங்கப்படுகிறது .**

ஓம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.